**கவனிக்க -** (i) 2026.04.30 ஆந் திகதிய 2487 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானியின் பகுதி I, III பிரசுரிக்கப்படவில்லை.
(ii) இம்முறை பிரசுரிக்கின்ற வர்த்தமானியின் பகுதி VI இல் 2026 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்ட நீதாசன வலயத்திற்கான யூரிமார் பெயர்ப் பட்டியலொன்று மும் மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2488 - 2026 මැයි මස 08 වැනි සිකුරාදා - 2026.05.08

2488 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க -** சேர்பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2026.04.24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, மே மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**திருத்தம்**

**மேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழிநுட்ப சேவையின் தொழிநுட்ப அலுவலர் (சிவில்), (மின்), (இயந்திரவியல்) தரம் III பயிற்சி (ஒரு வருட காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட காலம்) திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2483 ஆம் இலக்க 2026 ஏப்பிறல் 02 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட,

- மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழிநுட்ப சேவையின் தொழிநுட்ப அலுவலர் **(சிவில்)** தரம் III (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான **(மட்டுப்படுத்தப்பட்ட)** போட்டிப் பரீட்சை.

- மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழிநுட்ப சேவையின் தொழிநுட்ப அலுவலர் **(மின்)** தரம் III (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான **(மட்டுப்படுத்தப்பட்ட)** போட்டிப் பரீட்சை.

- மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழிநுட்ப சேவையின் தொழிநுட்ப அலுவலர் **(இயந்திரவியல்)** தரம் III (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான **(மட்டுப்படுத்தப்பட்ட)** போட்டிப் பரீட்சை.

எனும் **விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள் கீழ்வருமாறு திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது**. வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகள் மாற்றமின்றி காணப்படும்.

01. நிகழ்நிலை ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கக் கூடிய இறுதித் திகதி **2026.05.25 என திருத்தப்படுகிறது.**

02. விண்ணப்பங்களை எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக **2026.05.25** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு, பிழையின்றி பூரணப்படுத்தப்பட்டு தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் ஒப்பத்துடன் மற்றும் ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்டு **2026.06.01** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத் தக்கவாறு கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பப்பட வேண்டும். இத்திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது

03 விண்ணப்பிக்கும் பதவிக்குறிய அனைத்து தகைமைகளையும் **2026.05.10** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

திலக் செனரத்,
செயலாளர்.
மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

05-166/1

## திருத்தம்

### மேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### மேல் மாகாண சபை அரசாங்க சேவையில் தொழிநுட்ப சேவையின் தொழிநுட்ப அலுவலர் (சிவில்), (மின்), (இயந்திரவியல்) தரம் III பயிற்சி (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் பயிற்சி (இரண்டு வருட பயிற்சிக் காலம்) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2483 ஆம் இலக்க 2026 ஏப்பிறல் 02 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட

- மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழிநுட்ப சேவையின் தொழிநுட்ப அலுவலர் **(சிவில்)** தரம் III (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான **(திறந்த)** போட்டிப் பரீட்சை.

- மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழிநுட்ப சேவையின் தொழிநுட்ப அலுவலர் **(மின்)** தரம் III (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான **(திறந்த)** போட்டிப் பரீட்சை.

- மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் தொழிநுட்ப சேவையின் தொழிநுட்ப அலுவலர் **(இயந்திரவியல்)** தரம் III (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான **(திறந்த)** போட்டிப் பரீட்சை.

எனும் **விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள் கீழ்வருமாறு திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது**. வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகள் மாற்றமின்றி காணப்படும்.

01. முதலாவது பந்தி

மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் கீழ்வரும் பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக இலங்கைப் பிரசைகளில் கீழ்வரும் தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த திறந்த ஆட்சேர்ப்புப் பரீட்சை, **மேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எதிர்வரும் உத்தேசிக்கப்பட்ட திகதி ஒன்றில் கொழும்பில் நடத்தப்பட உள்ளது. பரீட்சை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

02. இரண்டாவது பந்தி

உப இலக்கம் IV அகற்றப்படுகிறது

03. மூன்றாவது பந்தி

வயதெல்லை –
விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு அதாவது **2026.05.10 ஆம் திகதிக்கு வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும்** இருத்தல் வேண்டும்

04. நான்காவது பந்தி.

(உ) மேல் மாகாண சபையில் நிரந்தர வதிவினைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள், நியமனம் பெற்ற பின்னர் கட்டாயமாக 10 வருடங்கள் மேல் மாகாணத்தில் கடமையில் ஈடுபட வேண்டும்.

குறிப்பு

01. நிகழ்நிலை ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கக் கூடிய இறுதித் திகதி **2026.05.25** என திருத்தப்படுகிறது

02. விண்ணப்பங்களை எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக **2026.05.25** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு, பிழையின்றி பூரணப்படுத்தப்பட்டு தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் ஒப்பத்துடன் மற்றும் ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்டு **2026.06.01** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத் தக்கவாறு கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பப்பட வேண்டும். இந்த திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

03. விண்ணப்பிக்கும் பதவிக்குறிய அனைத்து தகைமைகளையும் **2026.05.10** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

திலக் செனரத்
செயலாளர்.
மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

05-166/2

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு. -** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

### அட்டவணை - 2026

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | - | வெள்ளி | 08.05.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 24.04.2025 |
| | | வெள்ளி | 15.05.2026 | - | நண்பகல் 12 | வியாழக் | 30.04.2025 |
| | | வெள்ளி | 22.05.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 08.05.2026 |
| | | வெள்ளி | 29.05.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 15.05.2026 |
| **யூன்** | - | வெள்ளி | 05.06.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 22.05.2026 |
| | | வெள்ளி | 12.06.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 29.05.2026 |
| | | வெள்ளி | 19.06.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 05.06.2026 |
| | | வெள்ளி | 26.06.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 12.06.2026 |
| **யூலை** | - | வெள்ளி | 03.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 19.06.2026 |
| | | வெள்ளி | 10.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 26.06.2026 |
| | | வெள்ளி | 17.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 03.07.2026 |
| | | வெள்ளி | 24.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 10.07.2026 |
| | | வெள்ளி | 31.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 17.07.2026 |

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.